**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் 02/2023**

**வாதி தரப்பு சாட்சி-1 ராஜா திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 11.03.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் தெரியும். தாவா சொத்தின் பழைய சர்வே எண்.88/1, புதிய சர்வே எண்.90/1 ஆகும். வழக்குரையில் தாவா சொத்தின் புதிய சர்வே எண்.சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியிருக்கிறேன். நான் சொல்வது தவறு என்றும், அவ்வாறு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.90/1 க்கு பட்டா உள்ளதா என்றால் பட்டா இல்லை. பத்திரம் மட்டும்தான் உள்ளது. பழைய சர்வே எண்.88/1 ன் விஸ்தீர்ணம் என்னவென்றால் 1883 ¼ சதுரடி, அதாவது 4 ¼ செண்ட் ஆகும். மேற்படி நிலத்திற்கு என் பெயரில் பட்டா உள்ளதா என்றால் பட்டா விடுபட்டு போய்விட்டது. மேற்படி நிலத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் அது பட்டா இடம் அல்ல. யார் பெயரிலும் பட்டா இல்லை.

2) மேற்படி இடம் என்ன வகைப்பாடாக உள்ளது என்றால் அரசு நத்தம் புறம்போக்கு இடமாக உள்ளது. அதில் நானும் என் தம்பியும் குடிசை மாற்று வாரியத்தில் அனுமதி பெற்று வீடு கட்டி வசித்து வருகிறோம். அரசு தரப்பினரை இவ்வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் கோவில் உள்ளது. அதற்கு நான் பூசாரி. தாவாவில் இரண்டு வீட்டிற்கும் சேர்த்து நான்கெல்லை காட்டியுள்ளேனா என்றால் ஆமாம். தாவா சொத்தில் இரண்டு வீடு, ஒரு கோவில் உள்ளதா என்றால் ஆமாம். இரண்டு வீட்டிற்கும் மின் இணைப்பு உள்ளதா என்றால் ஆமாம். என் பெயரிலும் என் தம்பி பெயரிலும் மின் இணைப்பு உள்ளது. தாவா சொத்தில் கண்டுள்ள மின் இணைப்பு எண்.918 என் பெயரில் உள்ளது. என் தம்பி பெயரில் உள்ள மின் இணைப்பை தாவாவில் காட்டவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தின் அமைப்பு குறித்து புல வரைபடம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**

**Kulithalai.**